DEPOSITION OF WITNESS

(In the Court of the Additional District Munsif, Sankarankovil )

**O.S.No.178/2015**

| | |
|---|---|
| Deposition of Witness for | : PW 1 |
| Name | : சண்முகையா |
| Father's Name | : |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |
| Date | : 04.06.2025 |

Solemnly affirmed in accordance with provision of act 1873 on the day of 4th June 2025

**முதல்விசாரணை :**

நான் இவ்வழக்கில் 1ம் வாதி ஆவேன். நான் இன்று இந்த வழக்கில் எனக்காகவும், 2ம் வாதிக்காகவும் சேர்த்து எனது சத்தியபிரமாண நிரூபண வாக்குமூலத்தை தாக்கல் செய்கிறேன். மேற்படி வாக்குமூலத்தை படித்து பார்த்து அதில் நான் கையொப்பம் செய்திருக்கிறேன். நான் தாக்கல் செய்துள்ள நிரூபண வாக்குமூலத்தை எனது முதல் தரப்பு விசாரணையாக ஏற்றுக்கொள்ள பிரார்த்திக்கிறேன்.

1. 14.09.2000 தேதியிட்ட பிரதிவாதி வாதிகளுக்கு எழுதிக்கொடுத்த கிரைய ஆவணம் அசல் தாக்கல் செய்கிறேன் **அது வா.சா.ஆ. 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

**2.** 09.04.1990 தேதியிட்ட அய்யம்மாள் என்பவர் 2ம் தபசில் சொத்திற்கு மேல்புறம் உள்ள இடத்தை முத்தையா சேர்வை, சண்முகையா கரையாளர் ஆகியோர்களுக்கு பிறப்புவித்துக்கொடுத்த கிரைய ஆவணத்தின் உண்மை நகல் தாக்கல் செய்கிறேன் **அது வா.சா.ஆ. 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

**3.** 09.06.1994 தேதியிட்ட ஆறுமுகம் முதலியார் என்பவர் 2ம் தபசில் சொத்திற்கு கீழ்புறம் உள்ள சொத்தை 2ம் வாதியின் தந்தை சுப்பிரமணியம், சண்முகையா மற்றும் வேல்சாமி ஆகியோர்களுக்கு பிறப்புவித்துக்கொடுத்த கிரைய ஆவணத்தின் அசல் தாக்கல் செய்கிறேன் **அது வா.சா.ஆ. 3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

**4.** 09.10.1995 தேதியிட்ட M.P.சங்கரநாராயணமுதலியார் என்பவர் 2ம் தபசில் சொத்திற்கு கீழ்புறம் உள்ள சொத்தை 2ம் வாதியின் தந்தை சுப்பிரமணியம், சண்முகையா மற்றும் வேல்சாமி ஆகீயோர்களுக்கு பிறப்புவித்துக்கொடுத்த கிரைய ஆவணத்தின் அசல் தாக்கல் செய்கிறேன் **அது வா.சா.ஆ. 4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

**5.** 25.02.2015ம் தேதியிட்ட பிரதிவாதி வழக்கறிஞர் மூலம் 2ம் வாதிக்கு அனுப்பிய வழக்கு முன்னறிவிப்பு தாக்கல் செய்கிறேன் **அது வா.சா.ஆ. 5 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

**6.** 27.02.2015ம் தேதியிட்ட 2ம் வாதி அவரது வழக்கறிஞர் மூலம் பிரதிவாதிக்கும், பிரதிவாதியின் வழக்கறிஞருக்கும் அனுப்பிய பதில் அறிவிப்பு அஞ்சலக ரசீதுடன் தாக்கல் செய்கிறேன். **அது வா.சா.ஆ. 6 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

**7.** 28.02.2015 தேதியிட்ட பிரதிவாதியும், பிரதிவாதியின் வழக்கறிஞரும் பதில் அறிவிப்பை பெற்றுக்கொண்டதற்கான அஞ்சலக அட்டை –2 எண்ணம் தாக்கல் செய்கிறேன் **அது வா.சா.ஆ. 7 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

**8.** 28.11.2014 தேதியிட்ட 2ம் தபசில் சொத்திற்குண்டான 10(1) அடங்கல் உண்மை நகல் தாக்கல் செய்கிறேன். **அது வா.சா.ஆ. 8 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

நான் தாக்கல் செய்துள்ள மேற்படி ஆவணங்களை ஏற்றுக்கொண்டு அசல் வழக்கில் நாங்கள் கோரும் பரிகாரம் வழங்கிடப் பிரார்த்திக்கிறேன்.

**பிரதிவாதிகள் தரப்பில் வேண்டுகோளுக்கிணங்க குறுக்குவிசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.**